**தலைப்பு 204 – இந்து சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

இந்து சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் இந்து சமய மற்றும் பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஏப்ரல் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இந்து சமய மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியோகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் மீண்டெழும் செலவு விடயங்கள் 11 இற்காக மற்றும் 3 மூலதன விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 12,400,000 ஆன ஒதுக்கங்களில் நூற்றுக்கு 12 வீதத்திலிருந்து நூற்றுக்கு 100 வரையிலான வீச்சில் மொத்தம் ரூபா 5,451,447 ஆன ஒதுக்கங்கள் சேமிக்கப்பட்டிருந்தன. | கொவிட் - 19 தொற்று நோய் காரணமாகத் தேவைப்பாடுகள் ஏற்படாமை | திட்டமிடப்பட்டு பெறப்பட்ட ஒதுக்கங்களை குறிப்பிட்ட பணிகளுக்காகச் செலவிட வேண்டியமை. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 3 ஆந் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.4 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் குறிப்பு (iii) இன் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ள் கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியினால் வெளியிடப்பட்டிருந்த கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றுடன் இணங்கியிருத்தல் வேண்டும். அறிக்கையிடப்படாத எந்தவொரு பொறுப்பும் முன்னைய வருடத்திற்கான செலவாக 2020 ஆம் வருடத்தில் தீர்க்கப்பட முடியாத போதிலும் இரண்டு செலவு விடயங்களுக்கான 2021 ஆம் வருடத்தில் தீர்க்கப்பட்டிருந்த ரூபா 27,669 ஆன பொறுப்புக்கள் நிதிக் கூற்றுக்களிலோ அல்லது திணைக்கள பதிவேடுகளிலோ வெளிக்காட்டப்பட்டிருக்கவில்லை. | அறியாத வகையில் ரூபா 27,669 இற்கான கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் தவறவிடப்பட்டிருந்ததுடன் மீண்டும் இவ்வாறு நடவாது இருப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் திறைசேரியினால் வெளியிடப்படுகின்ற கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களுடன் இணங்கியதாக இருத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் வெளியிடப்பட்ட ரூபா 4,912,810 பெறுமதியான 31 காசோலைகள் கொடுப்பனவாளர்களுக்கு ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது தேக்கி வைக்கப்பட்டிருந்தன. | கொவிட் - 19 மற்றும் நோய் நிலைமை காரணமாக காசோலைகளை ஒப்படைத்தல் தாமதமாகியமை. | வெளியிடப்பட்ட காசோலைகள் விரைவில் கொடுப்பனவாளர்களுக்கு ஒப்படைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | ஏனைய திணைக்களங்கள் மற்றும் அமைச்சுக்களுக்கு இடமாற்றமாகிச் சென்ற மூன்று அலுவலர்களின் அறவிடப்பட வேண்டிய ரூபா 46,462 ஆன கடன் மிகுதிகள் 27 வருடங்களுக்கும் மேற்பட்ட காலமாக பேணப்பட்டு வருவதுடன் அக் கடன் மிகுதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2020 ஆகஸ்ட் 20 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க சுற்றறிக்கை மற்றும் நிதிப் பிரமாணம் 113(6) இன் பிரகாரம் ரூபா 25,000 இற்குக் குறைவான கடன் மிகுதிகளைப் பதிவழிப்பதற்காக விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | கடன் மிகுதிகளை அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்.**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 185 என்பதுடன் உள்ளபடியான பதவியணியினர் 150 ஆகும். அதன் பிரகாரம் பதவியணியினரின் வெற்றிடங்கள் 35 காணப்பட்டதுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | கருத்துரை வழங்கப்படவில்லை. | தேவையான பதவிகளுக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |